பழையமாணவர் சங்கம்,
இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)
திருக்கோணமலை.
08.07.2026.

அனைத்துப் பழையமாணவர் சங்க உறுப்பினர்களுக்கும்,

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2026.**

எமது பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.08.2026 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிருவாகசபைத் தெரிவு அன்றைய தினம் இடம்பெறவுள்ளதால், உறுப்பினர்களுக்கு புதிய நிருவாகசபையில் இணைந்து செயலாற்ற அழைப்பு விடுக்கப்படுகின்றது. அர்ப்பணிப்புடன் நேரம் ஒதுக்கி சங்கத்தின் நோக்கம் நிறைவேற்றப் பணியாற்ற விருப்பமுடைய உறுப்பினர்கள் கல்லூரி அலுவலகத்தில் (வாரநாட்களில் காலை 8.00 – 2.00 மற்றும் மாலை 5.00 -7.00 மணிவரையான நேரத்திலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 – 11.00 வரையான நேரத்திலும் ) உரிய விண்ணப்பத்தைப் பெற்று அதற்கான அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 29.07.2026 அன்று பி.ப 5.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கல்லூரி அலுவலகத்தில் சேர்ப்பிக்கவும்.

**தெரிவு இடம்பெறவுள்ள நிருவாகசபைக்கான பதவிகள் வருமாறு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தலைவர் | - | பதவி வழியாக அதிபருக்குரியது | |
| 2. | உப தலைவர் | - | இருவர் | (02) |
| 3. | செயலாளர் | - | ஒருவர் | (01) |
| 4. | உப செயலாளர் | - | ஒருவர் | (01) |
| 5. | பொருளாளர் | - | ஒருவர் | (01) |
| 6. | உப பொருளாளர் | - | ஒருவர் | (01) |
| 7. | நிருவாகக் குழு உறுப்பினர்கள் | - | பன்னிருவர் | (12) |

வருடாந்த பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. சென்ற கூட்டறிக்கை
4. செயற்பாட்டு அறிக்கை
5. கணக்கறிக்கை
6. புதிய உறுப்பினர் தெரிவு
7. ஏனைய விடயம்
8. நன்றியுரை

m. P

..........................................
ம.பிரகாஷ்
அதிபர்/தலைவர்

President
Old Boys Association
T/R.K.M.Sri Koneswara Hindu College
Trincomalee

..........................................
க.துஷ்யந்தன்
செயலாளர்

பழையமாணவர் சங்கம்,
இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)
திருக்கோணமலை.
08.07.2026.

அனைத்துப் பழையமாணவர் சங்க உறுப்பினர்களுக்கும்,

## பழையமாணவர் சங்க யாப்புத் திருத்த விசேட பொதுக் கூட்ட அறிவித்தல்.

எமது பழையமாணவர் சங்கத்தின் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமெனும் கருத்துகள் கடந்தகாலப் பொதுக்கூட்டங்களில் அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஆண்டு தோறும் பொதுக்கூட்டங்களில் திருத்தத்திற்கான முன்மொழிவுகள் சில சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் சங்கத்தினை காலத்திகேற்ப வழிநடத்திச் செல்லும் காத்திரமான, நீடித்து நிலைக்கும் தன்மையுடன் கூடிய யாப்பு உருவாக்கப்படுதல் வேண்டுமெனும் தீர்மானம் கடந்தகாலப் பொதுச்சபைகளில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்துடன் கடந்தகாலங்களில் பொதுச்சபையில் அங்கிகரிக்கப்பட்டு இதுவரை யாப்பில் முறையாகச் சேர்க்கப்படாது நடைமுறைப்படத்தப்படும் தீர்மானங்களை யாப்பில் உள்ளடக்குவதுடன் நிறைவான யாப்பினை வரையும் தீர்மானம் எமது நிருவாகசபையிலும் எட்டபட்டு, கடந்த 15.12.2025 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் அங்கத்தவர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டது.

அதற்கு மேலதிகமாக திருத்தங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் எதிர்வரும் 22.07.2026 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தங்கள் முன்மொழிவுகளை திருத்தம் செய்யவேண்டிய சரத்துகளை முறையாகக் குறிப்பிட்டு, தமிழ் மொழியில் எழுத்தாவணமாக பதிவுத் தபாலில் அல்லது hinduoba@outlook.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி விசேட பொதுக்கூட்டமானது எதிர்வரும் 26.07.2026 அன்று (ஞாயிற்றுக் கிழமை) கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருவதுடன் பழையமாணவர் சங்க அங்கத்தவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

M. Pk
.........................................
ம.பிரகாஷ்
தலைவர்

President
Old Boys Association
T/R.K.M.Sri Koneswara Hindu College
Trincomalee

.........................................
க.துஷ்யந்தன்
செயலாளர்.

CamScanner

அனைத்துப் பழையமாணவர் சங்க உறுப்பினர்களுக்கும்.

**பழையமாணவர் சங்க தினத்தை முன்னிட்ட விளையாட்டுப்போட்டிகள்**

விளையாட்டுப்போட்டிகள் 2026 யூலை 18, 19, 25, 26 ஆகிய நாட்களில் கல்லூரி மைதானத்திலும் உள்ளக விளையாட்டுகள் கல்லூரி வகுப்பறை மற்றும் பொருத்தமான இடங்களில் நடைபெறும். பழையமாணவர் அணிகள், பாடசாலை ஆசிரியர் அணிகள் மற்றும் மாணவர் அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியான போட்டிகளாக இவை அமையும்.

கீழ் உள்ள நேர அட்டவணைக்கு ஏற்ப போட்டிகள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நேர அட்டவணையின் பிரகாரம் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பிருப்பின் பங்குபற்றலாம். ஒருவர் பல போட்டிகளில் பங்குபற்றுதல் வேண்டும் என்பதற்காக போட்டிகளின் நேரம் மாற்றப்படமாட்டாது.

ஒவ்வொரு விளையாட்டுக்கும் பொறுப்பான பழையமாணவர் சங்க நிருவாகிகளைத் தொடர்புகொண்டு உங்கள் பதிவுகளை 17.07.2026 ஆந்திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

| Sno. | Game | Date | Time | Coordinator | Mobile No. |
|---|---|---|---|---|---|
| 1 | Cricket | 18,19 July 2026 | 9.00 am – 5.00pm | M.G. Jeyakanth | 0776167795 |
| 2 | Basketball | 25 July 2026 | 5.00 pm | M.Sujeevan | 0766887049 |
| 3 | Football | 25 July 2026 | 4.30 pm | I. Asok & B. Vasanthan | 0776031961, 0774947168 |
| 4 | Volleyball | 25 July 2026 | 9.00 am | A. Babudeen | 0777376388 |
| 5 | Badminton | 25, 26 July 2026 | 9.00 am | S.Karikalan | 0769290879 |
| 6 | Swimming | 25 July 2026 | 10.00 am | R. Haritharan | 0778098345 |
| 7 | Hockey | 19 July 2026 | 6.30 am | B. Vasanthan | 0776031961 |
| 8 | Kapady | 18 July 2026 | 6.30 am | B. Vasanthan | 0776031961 |
| 9 | Cycle Safari | 26 July 2026 | 5.30 am | S. Sasikumar | 0718422420 |
| 10 | Carrom | 25 July 2026 | 9.00 am | A. Aruleswar | 0774812148 |
| 11 | Chess | 01 August 2026 | 9.00 am | K. Thushyanthan | 0777043593 |
| 12 | Scrabble | 19, 26 July 2026 | 9.00 am | S.Theeparajah | 0706555123 |
| 13 | Table Tennis | 01 August 2026 | 9.00 am | V.Chanthuru | 0765666424 |

அனைவரும் தவறாது கலந்துகொண்டு மேற்படி போட்டிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பழையமாணவர் சங்கம்.**

இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

திருக்கோணமலை.

CS CamScanner

## பழையமாணவர் தின ஒன்றுகூடல்.

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழையமாணவர்களை ஒன்றிணைக்கவும் பாடசாலைக்கும் பழையமாணவர்களுக்கும் உள்ள பிணைப்பை வலுப்படுத்தும் நோக்கிலும் ஆண்டு தோறும் பழையமாணவர் சங்க ஒன்றுகூடல் நடத்தப்படுகின்றது.

அவ்வாறான ஒரு சிறப்பு மிக்க பழையமாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 2026.08.02 அன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கல்லூரியின் சிவலோகநாதன் திறந்தவெளியரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்விச் சாதனை படைத்து, துறைசார்ந்து உயர்ந்து நிற்கும் பழையமாணவர்களை கௌரவித்தல் எனும் நிகழ்வு இங்கு தொடர்ச்சியானது. அத்துடன் 2025/2026 பழையமாணவர் சங்கநிருவாகக் காலத்தில் கல்லூரி மற்றும் பழையமாணவர் சங்க செயற்பாடுகளுக்கு பல்வேறுவகையிலும் ஒத்துழைத்த பழையமாணவுகளை பாராட்டும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

- கலைநிகழ்ச்சிகள்
- பழையமாணவர்களுக்கான நன்றியைத் தெரிவித்து மதிப்பளித்தல்.
- பழையமாணவர் தின விளையாட்டுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசளித்தல்.
- மற்றும் இராப்பேசனம் என்பனவற்றுடன் நிகழ்சி சிறப்பபுற நடைபெறவிருக்கின்றது.

குறித்த நிகழ்வில் கலந்துகொள்பவர்கள், நுழைவுச் சீட்டினை (ரூபா 1500.00 பெறுமதியான) 30.07.2026 ஆந் திகதிக்கு முன்னர் பழையமாணவர் சங்க அலுவலகத்தில் பெற்று தங்கள் மேலான வரவை உறுதிப்படுத்திக்கொள்ளவும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.




CS CamScanner